அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

RCOP: 40/2017

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.சா.1 | 24.04.2026 |
| பெயர் உமேத்ராஜ் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:–

1. மனுசொத்திற்கு வேறு சொத்துகள் சம்மந்தமாக RCOP.No.5,6,7&8 of 2006 எனக்கு எதிராக தாக்கல் செய்து மனுதாரர் அவருக்கு ஆதரவாக உத்தரவு பெற்றுள்ளார் என்றால் சரிதான். EP.No.227,228,229&230 of 2011 வழக்குகளை மனுதாரர் தாக்கல் செய்து ரூ8,97,820 கேட்டுள்ளார் என்றாலும் நான் அதை கொடுக்க கடமைபட்டவர் என்றால் இல்லை. மனுதாரர் அ.வ.எண்933/2023 வழக்கை அம்பத்துார், சார்ப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது. அப்பலோ பேக்கேஜ் தொழிற்சாலை ஒன்றை சோலவனம் அருகில் உள்ள காரனுாரில் நான் நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல.

2. மனுதாரருக்கு வாடகை கொடுக்க நான் தகுதி உடையவர் என்றால்

நான் வாடகைக்கு இல்லை. அ.வ.எண்90/2004 என்ற வழக்கில் மாண்புமிகு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண் III 2007 வருடத்தில் மனுதாரர் எனக்கு ரூ5 லட்சம் வட்டியுடன் கொடுக்கவேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கூறிய வழக்கில் நான் மேல்முறையீடு எதுவும் செய்தேனா என்றால் கம்பெனி பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்ப்பட்டது. என் தனிப்பட்ட பெயரில் தாக்கல் செய்யவில்லை.

3. பிரமாணவாக்குமூலத்தில் மேற்கூறிய விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்கூறிய தீர்பின் உத்தரவுபடி மனுதாரர் எனக்கு ரூ5 லட்சம் வட்டியுடன் கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்கூறிய பணத்தில் ரூ3 1/4 லட்சம் மனுதாரர் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றாலும் பாக்கி பணத்தை வாடகை பணத்திற்காக கழித்துக்கொண்டார் என்றாலும் சரியல்ல. நான் மனுசொத்தில் வாடகைக்கு இருந்தபோது இன்றைய தேதி வரை வாடகை செலுத்தாமல் உள்ளேன் என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை மனுசொத்து மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மனுசொத்து என்னுடைய பேக்ட்டரி சம்மந்தப்பட்ட உள்ளது என்றால் சரிதான். நானும் மனுதாரரும் கிரையஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம் எனவே என் கம்பெனி பொருட்கள் வைத்துள்ளேன்.

4. தற்போது வரை வாடகை பாக்கி தொகை ரூ60,79,045 என்றால் சரியல்ல. நான் மேற்கூறிய தொகையை செலுத்ததால் மனுசொத்தில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என்றால் சரியல்ல. அ.வ.எண்90/2004 வழக்கில் நான் மனுதாரருக்கு வாடகை பணம் செலுத்த கடமைப்பட்டவர் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன் மேல்முறையீடு வழக்கு எண் 95/2013 வழக்கை மாண்புமிகு

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 21.01.2020 அன்று தீர்ப்பு வழங்கியது என்றால் சரிதான். மேற்கூறிய மேல்முறையீடு வழக்கில் நான் தான் வாடகைதாரர் என்று தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் வாடகை பற்றி சொல்லவில்லை. கிரையதொகையாக கொடுத்த ரூ5 லட்சத்தை மனுதாரரிடம் இருந்து பெற்றுக்கொள்ளும்படியும் கிரையம் பதிவு செய்யமுடியாது எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

5. மனுசொத்தில் நான் வேறுநபருக்கு வாடகைக்கு அமர்த்தி அந்த வாடகை பணத்தை நான் மாதம் ரூ.1,50,000 பெற்று கொள்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வரை வாடகை பாக்கி தொகை ரூ60,79,045 கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நான் வாடகை பணம் செலுத்ததால் மனுசொத்தில் இருந்து என்னை வெளியேற்றவேண்டும் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.